## திரு கோணமலை பல்கலைக்கழக
## ஐந்து மாணவர்களின் கொலை செய்தவழக்கில்
## கதறும் தமிழர்களின் துயரங்கள்

ஆசிரியரே கடந்தகாலத்தில் பல பிழையான செய்திகள் இந்த பால்கலைக்கழக பிள்ளைப்பற்றி வந்தது என்பதை பலர் அறிவார்கள் இதனால் தென்னிந்திய பிரபல செய்தித்தாளில் நேரடியாக எடுத்த பிரதியை அனுப்புகின்றேன். தமிழர்களுக்கு நடக்கும் அக்கிரமங்கள் பற்றி மக்கள் தெளிவான அறியவேண்டும் என்பதற்காக, எந்த இலாபமும் எதிர்பாராது „ஈரனல்” சேவையை செய்கின்றது என அறிந்ததால் தான் இதை அனுப்புகின்றேன் தயவுடன் தங்கள் சேவையில் பிரசுரிப்பீர்களா? ஊடகசதந்திரத்தை தர்மத்தின் வழிநடத்திவரும் தங்களுக்களுக்கும் அரச ஆமியின் செயல்பாட்டை வடிவமைத்தவர்களுக்கும் எமது நன்றி -வவுனியா தமிராஜயா-

இரண்டாவதாக வந்த பொலிஸ் வாகனத்தில் மகனின் சடலம் இருக்கின்றதோ என்ற அங்கலாய்ப்பில் வாகனத்தில் ஏறி சடலங் களை புரட்டிப் புரட்டி பார்த்தேன். இரத்த தால் தோய்ந்திருந்த அந்த சடலங்களை என் னால் அடையாளம் கானடியவில்லை. சிறிது நேரத்தின் பின்னர் ?ன்றாவதாக வந்து நின்ற பொலிஸ் வாகனத்தில் எனது மகன் ஹேமச்சந்திரனின் இரத்தம் தோய்ந்த சடலத்தை கண்டவுடன் கதறியழுது, மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டேன் என்று திருகோண மலையில் படுகொலை செய்யப் பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரான ஹேமச்சந்திரனின் தந்தை பொன்னுத்துரை யோகராஜா சாட்சிய மளித்தார். திருகோணமலை கடற்கரை வீதியில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு அருகில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவ? மாதம் 2ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது. படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரான ஹேமச்சந்திரனின் தந்தை பொன்னுத்துரை யோகராஜா நேற்று முன்தி னம் செய்மதி தொழில் நுட்பத்தின் முலமாக திரையில் தோன்றி ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித் திருந்தார். இதன் இரண்டாம் நாள் விசாரணைகள் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்புலோங்டன் பிளேசில் உள்ள சிலிடா நிறுவன கேட்போர் கூடத்தில் இடம் பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் மேலும் கூறியதாவது: நாய்களை சுடுவதை போல் சுட்டு குவிக் கப்பட்ட நிலையில் அந்த சடலங்கள் ஒன்றின் மீது ஒன்றாக போடப்பட்டிருந்தன திரு கோணமலையில் இடம்பெற்ற நீதிமன்ற விசாரணைகளில் சாட்சிய மளித்திருந்தால் இன்று இந்த ஆணைக்குழுவுக்கு முன்சாடசியமளிக்க இருந்திருக்க மாட்டேன். 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதியன்று படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் முவரின் பெயரையே என்னால் கூறமுடியும். ரொஹான், சயந்தன் மற்றும் சிவானந்தம் என்ற மாணவர்களே எனது மகனுடன் கொல்லப் பட்டனர். எனது ஊருக்கும் திருகோணமலை வைத்திய சாலைக்கும் இடையில் கால்மைல் தூரம் இருக்கின்றபோதும் அந்த வழியில் சோதனைச் சாவடிகள் இருப்பதனால் சுமார் 10 நிமிடபயணத்தின் பின்னரே வைத்தியசாலைக்கு செல்ல முடிந்தது. நான் அங்கு சென்றபோது வைத்திய சாலை வாயிலில் வைத்தியர்களும் தாதியர்களும் மற்றும் சிற்றூழியர்களுமே நின்றிருந்தனர். நான் ஐந்து நிமிடங்களுக்கு மேல் காத்திருந்தேன். அப்போது, திருகோணமலை துறைமுக பொலிஸ் வாகனம் ஒன்று வந்து நின்றது. அந்த வாகனத்தின் பின்பகுதிக்கு ஓடிய நான் வாகனத்தை நோட்டமிட்டேன். வாகனத்திற்குள் இரண்டு சடலங்கள் கிடந்தன. கணப்பொழுதில் வாகனத்தில் ஏறி மகனின் சடலம் இருக்கின்றதா எனத்தேடினேன். எனினும், எனது மகனின் சடலம் இருக்கவில்லை. பின்னர், வைத்தியசாலை சிற்றூழியர் களுடன் இணைந்து சடலங்களை பொலிஸ் வாகனத்திலிருந்து இறக்குவதற்கு உதவி செய்தேன். வாகன சாரதி கீழே இறங்கி நின்ற போதும் பொலிஸ் அதிகாரி இறங்க வில்லை. இரண்டு சடலங்களையும் இறக்கிய அடுத்த நொடியில் வாகனம் புறப் பட்டுச் சென்றுவிட்டது. நான் தொடர்ந்து அங்கு காத்திருந்தேன். சிலநொடியில்

மற்று மொறு பொலிஸ் வாகனம் வந்து நின்றது. அந்த வாகனத்தில் மூன்று சடலங்கள் கிடக்க கண்டேன். அந்த சடலங்களில் மகனின் சடலம் இருக்கின்றதோ என்ற அங்கலாய்ப்பில் சடலங்களை புரட்டினேன். இரத்தம் தோய்ந்த அந்த சடலங்களை என்னால் அடையாளம்காண முடியவில்லை. சடலத்திற்கு கொடுக்கப் பட வேண்டிய கௌரவம் எதுவும் அந்த சடலங்களுக்கு வழக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக நாய்களை சுட்டுக்கொன்று குவித்திருப்பதைப் போல் அந்த சடலங்கள் காட்சியளித்தன. மூன்றாவதாக வந்த பொலிஸ் வாகனத்தில் இரண்டு சடலங்கள் முன்னைய நிலையிலேயே கிடந்தன. வேதனையுடனும் பதற்றத்துடனும் சடலங் களை ஆராய்ந்தேன். இரத்தம் தோய்ந்த சடலங்கள் இரண்டில் ஒன்று மகன் ஹேமச்சந்திரனுடையது என்பதை கஷ்டங்களுக்கு மத்தியில் அடையாளம் கண்டு கொண்டேன். கத்திக்குளறினேன். மனம் பேதலித்தவனாய் சற்று நேரத்தில் தலை சுற்றி மயக்கம் போட்டு கீழே விழுந்தேன். மயக்கம் தெளிந்துசுமார் அரை மணிநே ரத்திற்குப் பின்னர் வைத்தியசாலைக்குள் சென்றுபார்த்தபோது, கொண்டுவரப்பட்ட ஏழு சடலங்களும் அறையொன்றிற்குள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த சடலங்களை சோதனையிட்ட வைத்தியர்கள் இரண்டு சடலங்களை சத்திரசி கிச்சை கூடத்திற்கும் மற்றைய சடலங்களை பிரேத அறைக்கும் கொண்டு செல்லுமாறு பணித்தனர். பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த ஐந்து சடலங்களுள் எனது மூன்றாவது மகனான ஹேமச்சந்திரனின் சடலமும் இருந்தது. அந்த நேரத்தில் மகனின் சடலத்தின் காதுகளில் இருந்து இரத்தமும் நீரும் வழிந்து கொண்டிருந்தன. மறுநாள் 3 ஆம்திகதிகாலை பிரேதபரிசோதனை இடம் பெற்றதன் பின்னர் அங்கு பிரச்சினை கலந்த குழப்பநிலையொன்று உருவானது. பிரேத பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட எனது மகன் ஹேமச்சந்திரன் புலிகள் இயக்கத் துடன் தொடர்புடையவர் என ஒப்புக்கொண்டு ஆவணத்தில் கையொப்ப மிட்டால் மாத்திரமே சடலம் கையளிக்கப்படும் என்று அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் என்னை வற்புறுத்தினர். அத்துடன், எனக்கு மிகுந்த அழுத்தத்தையும் கொடுத்தனர். பேதலித்த மனநிலையில் இருந்த நான் பொலிஸாரின் வற்புறுத்தலுக்கு உடன்பட வில்லை. உயர்தர மாணவனாக பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக் கப்பட்ட எனது மகன் எப்படி புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவனாக இருக்க முடியும். மகனுக்கும் புலிகளுக்கு மிடையில் எந்தவித தொடர்போ, உறவோ இருக்கவில்லை என் பதனால், என்னால் கையொப்ப மிட முடியாது. வேண்டுமென்றால் சடலத்தை வைத்துக்கொண்டு ஏதாவது செய்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டு உடனடியாக வைத்தியசாலையில் இருந்து வெளியில் வந்து விட்டேன். (இந்த நிலையில் ஆணைக்குழுவிடம் ஒரு கேள்வியை எழுப்ப நினைக்கின்றேன். அதாவது, இலங்கை முழுதும் தமிழ் பாடசாலைகள் இருக்கின்றன. அந்த தமிழ் பாடசாலைகளில் கற்கின்ற அனைத்து தமிழ் மாணவர்களும் புலிகளுடன் தொடர்புடையவர்களா? என்பதற்கு பதில் சொல்ல வேண்டும்). என்னிடம் வற்புறுத்தப்பட்டது போலவே ஏனைய மாணவர்களது பெற்றோரிட மும்வற்புறுத்தப்பட்டது. இந்த குழப்படிகள் சிறிதுநேரம் நீடித்துக் கொண்டிருந்தன. இதற்கு மத்தியில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் விசாரணை குறிப்புகளை பதிவு செய்து கொண்டிருந்தனர். சுமார் ஒரு மணிநேரத்திற்குப் பின்னர் காலை 11 மணியளவில் மகனின் சடலம் என்னிடம் கையளிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற மூன்றுமாதங்களுக்கு பின்னர் பள்ளிமாணவர்களால் ஏற்பாடு செய்யப் பட்ட ஞாபகார்த்த நிகழ்வு திருகோணமலை கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் காந்தி சிலைக்கு அருகிலேயே இடம் பெற்றது. இந்துசமய மரபுப்படி அகால மரணமான ஒருவருக்கு அவ்விடத்திலேயே குருக்களை அழைந்து வந்து ஆத்மசாந்திக் கிரியைகள் செய்வது வழக்கமாகும். அதனடிப் படையிலேயே அன்றைய நிகழ்வும் அமைந்திருந்தது. ஐந்து மாணவர்களின் உறவினர்களும் பெற்றோரும் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் பௌத்தபிக்கு ஒருவரும் கலந்து கொண்டு அனுதாப உரைநிகழ்த்தினார். பின்னர்படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்பான வழக்குவிசாரணை இடம்பெறுவதாக படுகொலை செய்யப் பட்ட மாணவன் ஒருவரின் தந்தையான வைத்திய கலாநிதி மனோகரன் மூலமாக தெரிந்து கொண்டேன். இந்த வழக்கு விசாரணைகளில் எனது மகன் ஹேமச்

சந்திரன் குறித்த உண்மை நிலை வரங்களை என்னால் வெளிப்படுத்த முடியாத அச்சுறுத்தல் நிலைக்கு உள்ளாக் கப்பட்டேன். நீதிமன்ற விசாரணைகளின் போது நிலைவரங்களை தெரியப்படுத்தி னால் நானும் எனது குடும்பத்தாரும் ஒட்டு மொத்தமாக சுட்டுக்கொல்லப்படுவோம் என்ற தோரணையில் தொலைபேசி மற்றும் கடிதம் மூலமான மிரட்டல்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன. திருகோண மலை நீதிமன்றத்தில் நின்று கொண்டிருந்த போது எனது அருகில் வந்த தமிழ் பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்று மொரு பொலிஸ் அதிகாரியை காண்பித்து உங்களது மகன் படுகொலை தொடர்பில் அவரும் சம்பந்தப்பட்டவர்தான் என என்னிடம் கூறினார். அவரை பார்த்த போதும் மகனின் நினைவில் இருந்தமையால் நான் தெளிவற்று இருந்தேன் இதேவேளை, திருகோணமலையில் இயங்கி வந்த ‘‘அக்ஷன் பெய்ம்‘‘ என்ற தொண்டு நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனது மூத்தமகன் முதூரில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். உயிருடன் இருக்கின்ற மகன்மாரின் வேண்டுகோளுக்கமைய மூன்றாவது மகனான ஹேமச்சந்திரன் தொடர்பான விடயங்களை நீதிமன்றத்தில் கூறவில்லை. அப்பா நீங்கள் நீதிமன்றத்தில் எந்த விடயமும் கூறத்தேவையில்லை. அப்படி கூறினால் நாங்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்டு விடுவோம். அதனால், இதனை தவிர்த்து விடுங்கள் என்று எனது மகன்மார் கேட்டுக்கொண்டனர். அவர்களின் நிலையை உணர்ந்த நான், நீதிமன்றத்திற்கு கூறவேண்டிய விடங்களை கூறவில்லை. எனினும், மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இதனால், நான் வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையில் இருந்தேன். அதேநேரம் எனது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப முடியவில்லை. வயதான நான் இறந்தாலும் பரவாயில்லை. சாட்சியம் அளிப்பது தொடர்பில் இனிமேல் நான் பயப்படமாட்டேன். எனது பிள்ளைகளை அநியாயமாக கொன்று விட்டார்கள். இந்த துயரமான நிலை ஏனையவர்களுக்கும் ஒருபாடமாக இருக்கவேண்டும். என்னிடம் பேதங்கள் கிடையாது. மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களையும் தனது பிள்ளைகளைப் போல் நினைத்து இவர்களது படுகொலை தொடர்பான குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்கவேண்டும் என ஆணைக்குழுவின் ஊடாக கேட்டுக் கொள்கின்றேன். இலங்கை நீதிமன்றத்தில் சொல்ல முடியாத விடயங்கள், அதனுடன் இணைந்த மேலும் சில விடயங்களும் தற்போது விசாரணைநிபுணர் குழுவிடம் அறிக்கையாக சமர்ப்பித்திருக்கின்றேன். இதன்போது, கபிலசேகர என்ற பொலிஸ் அதிகாரி குறித்து கேள்வி ஒன்றை எழுப்பிய ஆணைக்குழுவிற்கு பதிலளிக்கையில், உயர்பொலிஸ் அதிகாரியான கபிலசேகர விசேட அதிரடிப் படையினர் 24பேருக்கு கட்டளையிடுபவராக இருந்தார் என்பதை கேள்விப் பட்டிருக்கிறேன். அவர் தொடர்பான விபரங்களை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றேன் என்றார். திருகோணமலையில் பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மூலமாக நீதியான தீர்ப்பு கிடைக்காவிடின் குற்றவாளிகளுக்கான தண்டனையை நிச்சயமாக ஆண்டவன் கொடுப்பான் என்று படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான ஹேமச்சந்திரனின் தந்தையான பொன்னுத்துரை யோராஜா சாட்சியமளித்தார். வீட்டி ன் கேற்றடியில் (வாயிலில்) மகனும் அவரது நண்பர்களும் நின்று கொண்டி ருந்தபோது அங்கு வந்த அதிரடிப்படையினர் அடையாள அட்டையை பரிசோதித்தனர். மகன் அடையாள அட்டையை எடுப்பதற் காக வீட்டிற்கு ஓடிவந்தபோது அதிரடிப் படைவீரர் ஒருவர் ஏ.கே. 47 ரக துப்பாக்கியை நீட்டியவாறு மகனின் பின்னால் ஓடிவந்தார் என்றும் சாட்சிய மளித்தார். மகனைத் துரத்திக்கொண்டு வந்த குறித்த அதிரடிப்படை வீரரை சம்பவம் இடம் பெற்ற பிற்பட்ட ஓரிருநாட்களிலும் கண்டிருக்கிறேன். கடந்த 2006ஆம் ஆண்டு 2ஆம் திகதி திருகோணமலை கடற்கரை வீதியிலமைந்துள்ள காந்தி சிலைக்கருகில் பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னி லையில் நேற்று நான் காவது நாளாக சாட்சியமளிக்கும் போதே ஹேமச்சந்திரனின் தந்தையார்

பொன்னுத்துரை யோகராஜா மேற்கண்டதகவல் களைத் தெரிவித்தார். இந்த விசாரணைகளின் போது மூதூரில் வைத்துக் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் ஊழியரும் மூத்த புதல்வருமான கோடீஸ்வரன் தொடர்பாகவும் அவரிடம் கேள்வி கள் கேட்கப்பட்டன. இதன்போது அவர் மேலும் சாட்சியமளிக்கையில், 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதியே மூத்தமகன் கோடீஸ்வரனுடன் இறுதியாக எனக்குப் பேசக்கிடைத்தது. அன்றைய தினம் அவர் மூதூருக்குச் செல்ல வேண்டியிருந்ததால் 200 ரூபாபணம் கொடுத்து அவரது செலவுக்கு வைத்துக் கொள்ளுமாறு கூறி அவரை வழியனுப்பி வைத்தேன். 3ஆம் திகதி மாலை வேளை யில் கோடீஸ்வரனுடன் தொலைபேசியினூடாக பேசினேன். அதன் பின்னர் அவரு டன் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அக்ஷன் பெய்ம் அலுவல கத்திற்கு நான் சென்று வருவது வழக்கமாகும். அதனடிப்படையில் 5ஆம் திகதி காலை 9 மணியளவில் அவ்வலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கு வந்த அலுவலர் ஒருவர், மூதூருக்குச் சென்றிருந்த அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் 17 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாக அங்கு நின்று கொண்டிருந்த ஆபிரிக்க நாட்டு அதிகாரிகளிடம் கூறியதைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அக்ஷன் பெய்ம் ஊழியர்கள், இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி புலிகளால் வெளியிடப்பட்ட செய்திகள் குறித்து எனக்கு எதுவுமே தெரியாது. இளைய மகன் ஹேமச்சந்திரன் படுகொலை செய்யப் பட்டது குறித்தே இங்குசாட்சியமளிக்க வந்திருக்கின்றேன். இதில் மூத்தமகனு டைய விவகாரத்தையும் இணைத்துப் பேசுவது குறித்துநான் அறிந்திருக்கவில்லை. கடந்த மூன்று தினங்களாக மீண்டும் மீண்டும் ஒரேவிடயத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதால் எனது மனநிலை பாதிப்படைகின்றது. எனவே அசௌகரியம் ஏற்படாதவாறு என்னை நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். எனது பிள்ளையை அநியாயமாகக் கொன்றுவிட்டார்கள். இந்தப்படுகொலை தொடர்பில் இலங்கையில் எனக்கு நீதி கிடைக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் படுகொலையின் உண்மைத் தன்மைகளை வெளியிட முடியாதவாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தேன். தற்போது இந்த வெளிநாட்டு நிறுவனம், திருகோணமலையில் இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக அக்கறை செலுத்தி இருக்கா விட்டால் இந்தப் படுகொலைகளுக்கான பின்னணியும் அதில் மறைந்து கிடக்கும் உண்மைகளும் வெளிவராமலேயே இருந்திருக்கும். சம்பவ தினத்தன்று மாலை 6.30 மணியளவில் எங்களது வீட்டு கேற்றடியில் ஹேமச் சந்திரன் மற்றும் அவரது நண்பர்கள் நால்வரும் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த அதிரடிப்படை வீரர் ஒருவர் அடையாள அட்டையைப் பரிசோதித்தார். மகன் ஹேமச்சந்திரனுக்கு சிங்களம் தெரியாது. தனது அடையாள அட்டையை எடுப்பதற்காக வீட்டை நோக்கி ஓடிவந்த போது அவருக்குப் பின்னால் அதிரடிப்படை வீரர் ஏ.கே. 47 ரக துப்பாக்கியை நீட்டிப்பிடித்த வாறு ஓடிவந்தார். இந்த இளைஞர்கள் ஏன் இங்கு நின்று கொண்டிருக்கின்றனர் என அந்த அதிரடிப்படை வீரர் என்னிடம் கேட்டபோது, அவர்கள் உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருப் பவர்கள். கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது பேசிக் கொண்டிருந் திருப்பார்கள் என அவருக்குப் பதிலளித்தேன். அந்த மாணவர்கள் பேசிக்கொண்டி ருக்க வேண்டுமானால் கடற்கரைக்குச் செல்லுமாறும், வீதியோரத்தில் கூட்டமாக நிற்கவிட வேண்டாமென்றும் என்னிடம் அந்த அதிரடிப்படை வீரர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து, ஐவரும் அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டனர். அவர்கள் கடற்கரைக்குத்தான் சென்றார்களா என்பது எனக்குத் தெரியாது. சிறிது நேரத்தின் பின்னரே அந்த அகோர சம்பவம் நிகழ்ந்தது. இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 10தினங்களில் அதற்குக் காரணமாக இருந்த அதிரடிப் படை வீரர்களை திருகோணமலை நகரத்தில் காணக்கிடைக்கவில்லை. குறுக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அதிரடிப்படை சார்பாக ஆஜராகி யிருந்த சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர, எப்போது நாட்டிலிருந்து வெளி யேறினீர்கள் என்று கேட்ட கேள்வி விசாரணையில் சர்ச்சையை ஏற்படுத்தியது. செய்மதித் தொழில்நுட்பம் ஊடாக சாட்சியம் அளித்துக் கொண்டிருந்தவருக்கு முன்னால் இருந்த ஒலிவாங்கி இயக்கம் ஐ.ஐ.ஜி.ஈ.பி. நிபுணர் குழு உறுப்பினர்

டேவிட் சவேஜினால் நிறுத்தப்பட்டதுடன், சாட்சியான பொன்னுத்துரை யோகராஜா வும் உடனடியாக அவ்விடத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் ஒலி வாங்கிக்கு முன்வந்த டேவிட் சவேஜ், விசாரணைகளுக்கு அவசியமான கேள்விகள் மட்டுமே கேட்கப்பட வேண்டும். சட்டத்தரணியால் கேட்கப்பட்ட குறித்த கேள்வி சாட்சியின் வாக்குமூலத்திற்கு அப்பாற்பட்டதாகும். அந்த கேள்வி தவிர்க்கப்பட வேண்டியது. இது அவரது பாதுகாப்புக்கு பாரதூரமானதாக அமைந்து விடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார். இதற்கு பதிலளித்த ஆணைக் குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலாகம, சாட்சியான பொன்னுத்துரை யோகராஜா ஆணைக்குழுவுக்கு அளித்திருக்கும் அறிக்கையின் பிரகாரமே சட்டத்தரணியால் கேள்வி எழுப்பப்படுகின்றது. அதற்கு சாட்சி ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது. இந்த விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் இடம்பெறும். பதற்றமும் கலவரமும் கலந்த நிலையில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய தந்தை, ஹேமச்சந்திரனைப் படுகொலை செய்துவிட்டார்கள். அவனது சடலத்தை வைத்தியசாலையில் பார்த்தேன் என்று என்னிடம் தெரிவித்தார் என திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை **யின் போது சாட்சியமளித்த ஹேமச்சந்திரனின் சகோதரன் பாஸ்கரன் யோகராஜா தெரிவித்தார்.** ஹேமச்சந்திரனின் 90ஆவது நாள் கிரியைகளில் கலந்து கொண்ட எனது மூத்த சகோதரன் கோடீஸ்வரனையும் மூதூரில் சுட்டுக் கொன்று விட்டனர் என்றும் அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார். கடந்த 2002ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை கடந்த 13ஆம் திகதி முதல் இடம் பெற்று வருகின்றது. செய்மதித் தொழில்நுட் பத்தினூடாக இடம்பெற்று வருகின்ற இவ்விசாரணைகளில் கொல்லப்பட்டவரான ரஜிஹரின் தந்தையான வைத்தியக் கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன், சம்பவத் தில் படுகாயமடைந்து உயிர்பிழைத்த பரராஜசிங்கம் கோகுல்ராஜ், படுகொலை செய்யப்பட்ட ஹேமச்சந்திரனின் தந்தை பொன்னுத்துரை யோகராஜா ஆகியோர் இது வரையில் சாட்சியமளித்துள்ளனர். இந்த வரிசையில் நேற்று முன்தினம் வியா ழக்கிழமை ஹேமச்சந்திரனின் சகோதரனான பாஸ்கரனும் சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தார். ஆணைக்குழுவால் பாஸ்கரனிடம் கேட்கப்பட்ட கேள்வி களுக்குப் பதிலளிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வைத்தியக் கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன் மற்றும் பொன்னுத்துரை யோகராஜா ஆகியோர், திரையில் தோன்றி சாட்சியளித்த அதேவேளை பரராஜசிங்கம் கோகுல்ராஜ், பாஸ்கரன் ஆகியோர் தங்களது பாதுகாப்புக் காரணங்களுக்காக திரைமறைவில் இருந்தே சாட்சியமளித்திருந்தனர். சர்வதேச சுயாதீன பிரசித்தி பெற்ற நபர்களின் குழுஏற்பாடு செய்திருந்த இந்தச் செய்மதித் தொழில் நுட்பத்தி னூடாக சாட்சிய மளித்த பாஸ்கரன் மேலும் கூறியதாவது: 12.07.1978 என்ற திகதியில் பிறந்த நான் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றேன். சகோதரன் ஹேமச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக 2008பெப்ரவரி மாதம் 10ஆம்திகதி எனது தந்தையார் பொன்னுத்துரை யோகராஜாவால் சர்வதேச சுயாதீன பிரசித்திபெற்ற நபர்களின் குழுவுக்கு வழங்கப் பட்ட சாட்சி அறிக்கையை நானே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். அத்துடன், அக்குழுவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எனது தந்தையாரால் அளிக் கப்பட்ட பதில்களுக்கும் மொழிபெயர்ப்பு பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் நானே. இச்சந்தர்ப் பத்தில் நானுட்பட எனது தந்தையார் பொன்னுத்துரை யோகராஜா, இந்தக்குழு உறுப்பினர்களான டேவிட், சவேஜ் மற்றும் டெனிஸ், பில்லர் ஆகிய நால்வருமே பங்குபற்றியிருந்தோம். சம்பவம் இடம்பெற்ற 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் திருகோணமலையிலேயே இருந்தேன். ஜனவரி மாதம் 2ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் சகோதரன் ஹேமச்சந்திரனும், அவரது நண்பர்களும் எமது வீட்டு கேற்றடியில் நின்று பேசிக்கொண்டிருந்த போது அதிரடிப்படையினர் அவர் களிடம் அடையாள அட்டை சோதனை நடத்தியுள்ளனர். ஹேமச்சந்திரன் அடை யாள அட்டையை எடுப்பதற் காக வீட்டுக்கு ஓடிவந்த போது அவருக்குப் பின்னால்

அதிரடிப்படை வீரர்ஒருவரும் ஓடிவந்து சகோதரனைத் தாக்குவதற்கு முற்ப ட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றபோது நான் வீட்டினுள்ளேயே இருந்தேன். எனது பெற்றோரின் ஊடாகவே இவைகளைத் தெரிந்து கொண்டேன். அக்கால கட்டத்தில் திருகோணமலையின் சூழ்நிலைகள் மோசமாக இருந்தமையால் நான் வீட்டை விட்டு வெளியில் செல்வதில்லை. எனது பெற்றோரால் எனக்கு வெளியே செல்ல வேண்டாமென பணிக்கப் பட்டிருந்தது. இதன் காரணத்தினாலேயே நான் வீட்டை விட்டு வெளியில் வரவில்லை. இதனால், வீட்டுக்கு வந்த அந்த அதிரடிப் படைவீரரையும் என்னால் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதிரடிப்படை வீரர் வீட்டை விட்டுச்சென்று விட்ட சிறிது நேரத்தில் பாரிய வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. அப்போது (காஸ் சிலிண்டர்) எரிவாயுத்தாங்கி யொன்று வெடித் திருக்கும் என்று நான் வீட்டாரிடம் கூறினேன். இல்லை. அது குண்டு வெடித்ததற் கான சத்தமே என்று கூறிய எனது தந்தை, ஹேமச்சந்திரன் வெளியில் சென்றிருக்கிறான். போய்ப்பார்த்து வருகிறேன் என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்றார். தந்தை வீட்டை விட்டுச் சென்று சுமார் 20 நிமிடங்களில் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டன. அதில் சுமார் 20முதல் 30ரவைகள் தீர்க்கப் பட்டிருக்கலாம் என நம்புகின்றேன். துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டு 10 நிமிடங் கள் தாமதமாகவே தந்தை வீட்டுக்கு ஓடிவந்தார். அப்போது அவர் பதற்றத்துடன் இருந்ததை உணர்ந்து கொண்டேன். என்ன நடந்தது எனக் கேட்டபோது, தற்போது கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுக்கு மத்தியில் ஹேமச்சந்திரனின் கூக்குரலும் கேட்டது. "அம்மா காப்பாற்றுங்கள், அய்யோகாப் பாற்றுங்கள்" என்ற சத்தங்கள் கேட்டன. என் மனதிற்குள் குழப்பமாக இருக்கின்றது. நான் வைத்தியசாலைக்கு, சென்று வருகிறேன் என்று கூறியவாறு புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கும் போது சண்முகராஜா என்பவரும் அங்கு ஓடிவந்தார். அவரும் படபடப்புடனேயே காணப் பட்டார். சண்முகராஜாவின் மகனும் ஹேமச்சந்திரனும் நெருங்கிய நண்பர்கள் முதலாம் தரத்திலிருந்து ஒன்றாகப் பயில்பவர்கள். விடயத்தை விளங்கிக்கொண்ட சண்முகராஜாவும் எனது தந்தையாரும் வைத்தியசாலைக்குச் சென்றனர். இதன் பின்னர், சிறிது நேரத்தில் பதற்றமும் கலவரமும் ஒன்றாக கலந்ததொருநிலையில் வந்த தந்தை, மகன் ஹேமச்சந்திரனைப் படுகொலை செய்துவிட்டார்கள். அவரது சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்த்து விட்டேவருகி றேன் என்று கூறினார். அவர் கூறிய இந்த மிகமோசமான துயரச்செய்தியை தாயாரி டம் ஆறுதலாகவும் பக்குவமாகவும் கூறினோம். படுகொலைச் சம்பவம் இடம்பெற்று மூன்று மாதத்தின் பின்னர் திருகோணமலை கடற்கரை வீதியிலுள்ள காந்தி சிலைக்கரு கில்படுகொலை செய்யப்பட்டமாணவர் களது 90ஆம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகள் இடம்பெற்றன. இக்கிரியைகளில் எனது மூத்த சகோதரரான கோடீஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார். ஆனால், அவரும் இப்போது எம்முடன் இல்லை. "அக்ஷன் பெய்ம்" தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய அவர், மூதூரில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டுவிட்டார். இவருடன் மொத்தமாக 17 ஊழியர் கள் இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர். இத்துடன் முடிவடைந்த விசாரணைகள் மீண்டும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை தொடரவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்தது. திருகோணமலை கடற்கரை வீதியில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளில் ஈடுபட்டிருந்த போது, அங்கு இயந்திர துப்பாக்கிகளு க்கு பயன்படுத்தும் 7 ரவைகள் மீட்கப்பட்ட தாக திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் இரண் டாவது நாளாக சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்கள் ஐவரது கொலை தொடர்பில் உப்புவெளி பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரியுடன் 12 அதிரடிப்படையினரை கைதுசெய்தது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிக்கை யை திருகோணமலை நீதிவானிடம் சமர்ப் பித்திருந்தேன் என்றும் அவர் கூறினார். கடந்த 2006 ஜனவரி மாதம் 2 ஆம் திகதி, திருகோணமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் குறித்த ஜனாதிபதி விசாரணைகள் ஆணைக்குழு விசாரணைகள் நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில்

அமைந்திருக்கும் ரெஸ்டோரண்ட் ஹோலில் இடம்பெற்ற போதே பொலிஸ் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு கூறினார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் சார்பில் சட்டத்தரணியால் கேட்கப்பட்ட கேள்விக ளுக்கு தொடர்ந்து பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது: விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் இருவரை, கொழும்பு பயங்கரவாத ஒழிப்புப்பிரிவிடம் ஒப்படைத்த தன்பின்னர் திருகோண மலைக்கு திரும்பி னேன். அங்கு மேலதிகாரிகளின் பணிப்புரைக்கமைய சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து இளைஞர்கள் தொடர்பான விசாரணை நட வடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமானேன். ர4 ஆம் திகதி காலை 7 மணியளவில் உதவி பொலிஸ் அதிகாரியைச் சந்தித்த நான், பின்னர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நால்வருடன் காந்திசிலை அமைந்திருக்கும் பகுதிக்கு விசாரணைகளுக்காக செல்லும் முன்னர் அதற்கான காரணத்தை பொலிஸ் நிலைய தினசரி விசாரணை குறிப்பில் பதிவு செய்திருந்தேன். சம்பவ இடத்திற்குச் சென்றபோது அங்கு குறித்த சில இடங்களில் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது காந்திசிலை அமைந்திருந்த இடத்திலிருந்து சுமார் ஆறு மீட்டர் தொலைவில் 7 துப்பாக்கி ரவைகளை மீட்டதுடன் அந்த ரவைகள் எம்.எம். 7.62 என்ற ரகத்தைச் சேர்ந்தவை என்றும் அவை இயந்திர துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படுபவைதான் என்றும் தீர்மானித்துக் கொண்டதுடன் மீட்கப்பட்ட ரவைகள் இர சாயன பகுப்பாய்வுக்குட்படுத்தப்படும் என் பதால் அந்த ரவைகளை பாதுகாப்பாக வைத்திருந்தேன். முதற்கட்ட விசாரணை களை முடித்துக் கொண்ட நான், காலை 9.05 மணியளவில் பொலிஸ் நிலையத்திற்கு திரும்பினேன். இதன் பின்னர் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக 9.15 மணியளவில் வைத்தியசாலைக்குச் சென்றேன். இதன்போதே சம்பவ இடத்திற்கு நீதி வான் ச?கமளிக்கவிருப்பதாக பொலிஸ் நிலையத்திலிருந்து எனக்கு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, குறித்த இடத்திற்கு நானும் சென்றிருந்தேன். சம்பவம் இடம்பெற்ற தினமான 2 ஆம் திகதி நீதிவான் விசாரணைகளை மேற்கொ ண்டிருந்தமை குறித்து அறிந்திருந்தும் அவ் விடத்திற்கு நீதிவான் மீண்டும் வருவதற் கான காரணத்தை கேட்டறிந்துகொள்ள முற்படவில்லை. காரணம் அவரது விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கொடு க்க வேண்டியது மட்டுமே எனது கடமையாகும். இதன்பின்னர், சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் உப்புவெளி பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரி ஒருவருடன் மேலும் 12 அதிடிரப்படை வீரர்களும் திருகோண மலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்ததை அறிந்து கொண்டேன். இதனையடுத்து, திருகோணமலை குற்ற த்தடுப்பு பிரிவுடன் தொடர்பு கொண்டு சந் தேகநபர்கள் குறித்த திரட்டிய அறிக்கை ஒன்றையும் நீதிவானுக்கு சமர்ப்பித்திருந் தேன். எங்களுக்குப் பயமில்லை. விரைவில் வீடு வந்துசேருவோம் என்ற வார்த்தைகளே நான் ஜயசீலனுடன் பேசுகின்ற கடைசி வார்த்தைகள் என்பதை அறிந்திருக்கவில்லை. அந்த கடைசி வார்த்தைகள் இலகுவில் மறக்கக்கூடி யவையும் அல்ல. ஏனெனில், அவர் தற்போது உயிருடன் இல்லை. இவ்வாறு, மூதூரில் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் ஊழியரான ஜயசீலனின் உறவி னர் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்நிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். ஜயசீலனுக்கு எதிரிகள் எவரும் இருக்க வில்லை. அதேவேளை, அவர் இராணுவத்தினருடனோ அல்லது தமிழீழ விடுதலைப்புலி களுடனோ எவ்வித தொடர்புகளையும் வைத் திருக்கவில்லை என்றும் அவர் கூறினார். 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூதூரில் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் அரசசார் பற்ற தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசா ரணைகள் நேற்று இடம்பெற்றபோதே ஜயசீ லனின் உறவினர் மேற்கண்டவாறு கூறினார். பாரதூரமான மனித உரிமைமீறல்களை விசா முக்கவென ஜனாதிபதி யினால் நியமிக்கப் பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்டுவரும் இவ் விசாரணைகளில் ஒன் பதாவது சாட்சியாக இவர் நேற்று ஆஜராகியிருந்தார். அரசதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணிதுலிப் ஜயக்கொடி, இராணுவத்தரப்பு சட்டத்தரணி கோமின் தயாசிறி மற்றும் அக்ஷன் பெய்ம் சார்பில் சட்டத்தரணி ரத்தினவேலன் ஆகி யோர் சாட்சியிடம் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை நடத்தினர்.

இதன்போது தொடர்ந்தும் பதிலளித்த சாட்சி மேலும் கூறு கையில், 2006 ஆகஸ்ட் முதலாம் திகதி நண்பகல் முதல் மூதூரின் நிலைமைகள் மோசமடையத் தொடங்கிவிட்டன. இதனையடுத்து திருகோ ணமலைக்கும் முதூருக்குமான கடல் வழி மற்றும் தரை வழிப் போக்குவரத்துக்கள் அனைத் தும் தடை செய்யப்பட்டன. மூதூர் நிலைமைகள் மோசமடைந்திருந்த தாலும் எனது உறவினரான ஜயசீலன் அங்கு இருந்ததாலும் முதலாம் திகதி முதல் அவருடன் அடிக்கடி தொடர்புகொண்டு பேசி னேன். அதேபோல், ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி காலை 6 மணி முதல் 6.30 மணி வரையிலான இடைப்பட்ட நேரத்திலும் அவருடன் தொலை பேசியினூடாக பேசினேன். அந்த சமயத்தில் எமது அலுவலகத்தைச் சுற்றி இரா ணுவத்தினர் பாதுகாப்புக் கடமையிலிருக் கின்றனர். எங்களுக்கு பிரச்சினையில்லை, பயமுமில்லை. விரைவில் வீடுவந்து சேரு வோம் என்று கூறினார். அன்று அவர் கூறிய அந்த வார்த்தைகளே நான் ஜயசீலனுடன் இறு தியாக பேசப்போகின்ற அல்லது பேசிய வார்த்தைகள் என்பதை அப்போது நான் உணர்ந்திருக்கவில்லை. ஜயசீலன் பேசிய அந்த சில வார்த்தைகளிலிருந்து பாதுகாப்பாக வீடு திரும்புவார் என்றே எண்ணியிருந்தோம். ஆனால், அவர் உயிருடன் வரவில்லை. 5ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் 8 பேர் மூதூரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாகவும் அங்கு ஜயசீலன் இருக்கின்றாரா என்று கேட்டும் தொலைபேசி அழைப்பொன்று எனது உறவினர் ஒருவருக்கு வந் தது. இதனால் பதற்றமடைந்த நானும் ஏனைய உறவினரும் செய்தி உண்மை யானதா என அறிவதற்கு திருகோணமலை அக்ஷன் பெய்ம் பிரதான அலுவலகத்திற்கு ஓடினோம். அங்கு அவர்கள் எமக்கு சரியான தகவல்களை தரவில்லை. ஊழியர்களுக்கு ஆபத்துகளில்லை. அனைவரும் உயிருடன் பாது காப்பாக இருக்கின்றனர் என்று மட்டுமே கூறினர். அந்த உத்தியோகத்தர்கள் கூறிய தகவல்களில் எமக்கு நம்பிக்கை ஏற்படாததால் மூதூர் நிலைமைகளை அறிவதிலும் ஊழியர்கள் எந் தளவு பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பது குறித்து தெரிந்துகொள்வதிலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். அதில் பல னேதும் கிடைக்கவில்லை. மறுநாள் 6ஆம் திகதி சூரியன் எவ்.எம். வானொலியில் அக் ஷன் பெய்ம் ஊழியர்கள் 17 பேர் மூதூரில் சுட் டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன்பின்னர் திருமலையில் அமைந்துள்ள அக்ஷன் பெய்ம் அலுவலகத்திற்கு சென்று ஊழியர்கள் கொல்லப்பட்டுவிட்ட செய்தி யை தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சடலங்களை உடனடியாக கொண்டு வந்து தருமாறும் கேட்டு நின்றோம். அப்போது வதந்திகளை நம்பவேண்டாம். உண்மைத் தகவல் களை உங்களுக்கு கூறுகிறோம், அது வரையில் அமைதியாக இருங்கள் என்று அவ் உத்தியோகத்தர்களால் எமக்கு கூறப்பட்டது. இதனையடுத்து, அலுவலக வளாகத்திலேயே காத்துக்கிடந்தோம். கொழும்பிலிருந்து அக்ஷன் பெய்ம் வெள்ளை இன உத்தி யோகத்தர் ஒருவர் மாலை 3மணியளவில் திருகோண மலைக்கு வந்ததன் பின்னரே ஊழி யர்கள் 17 பேரும் கொல்லப்பட்டுவிட்டதாகவும் அவர்களது சடலங்களை கொண்டுவந்து தருவதாகவும் கூறப்பட்டது. இதன்படி 8ஆம் திகதி அதிகாலை 1.30 மணி யளவில் சடலங்கள் கொண்டுவரப்பட்டு திரு கோணமலை வைத்தியசாலையில் வைக்கப் பட்டன. ஜயசீலனின் சடலம் சற்று அழுகிய நிலையில் இருந்ததுடன் உடற்கட்டு மாறா நிலையில் இருந்ததாலும் அவரது தாடி மற் றும் கையில் அணிந்திருந்த காப்பு போன்ற வற்றை வைத்து சடலத்தை அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனையின் பின்னர் என்னிடம் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொண்ட பொலிஸார் சடலத்தை அதிக நேரம் வீட்டில் வைத்திருக்கக்கூடாது என்றும் அது உடனே அடக்கம் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினர். அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணி யளவில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இதனையடுத்து ஒரு சில மாதங்களின் பின்னர் விசாரணைகளுக்கென சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட ஜயசீலன் தனது பத்தாவது வயது முதல் திருகோண மலையிலேயே வசித்து வந்தார். மருத்துவத்துறையில் ஓரளவு அறிவு கொண்ட அர் இலங்கை இராணுவத்தினருடனோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடனோ

தொடர்புகள் எதனையும் வைத்திருக்கவில்லை. அத்துடன், அவருக்கு எதிரிகளும் இருந்ததில்லை என்றார்.